**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**

**CRMP.NO.862/2025**

**IN**

**DVC.No.1/2025**

V. ஷியாமிலி மற்றும் ஒருவர் ....மனுதாரர்கள்/புகார்தாரர்கள்

/எதிர்/

கலைச்செல்வன் மற்றும் 5 நபர்கள் ....எதிர்மனுதாரர்கள்/
எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது இறுதியாக இன்று(22.01.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சிவா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையில், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணத்தை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டி கட்டளை 7 விதி 14(3)-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குறியீடு செய்யவேண்டிய கூடுதல் ஆவணத்தின் விபரம்**

**1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துக்களின் பட்டா ஆவணம்**

**2) மனுவுரை சுருக்கம்**

1. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மீது இடைக்கால ஜீவனாம்சம் கோரி சமூகம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அதில் மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே 3 ஆவணங்கள் குறியீடு செய்து மற்றும் வாய்தாக்கள் முடிக்கப்பட்டு, அதன்பிறகு எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்தாக்கள் முடிக்கப்பட்டு, தற்பொழுது எதிர்மனுதாரர் தரப்பு Asset liabilities தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துக்களின் பட்டா ஆவணம் தற்பொழுது தான் மனுதாரர் வசம் கிடைத்துள்ளது. எனவே, மேற்படி கூடுதல் ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ளார்கள்.

4). இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

## 5). தீர்வு

மனுதாரர்களின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் மனுவானது எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைகால ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தரப்பினர்களுக்கு அவர்களது கூடுதல் ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு போதுமான நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணமான 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துக்களின் பட்டா ஆவணத்தை ஏற்றுக்கொண்டும், இவ்வழக்கின் இறுதியான தீர்விற்கு இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.01.22 16:38:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.